லங்கா லேலன்ட் (சொந்த) லிமிடட்

31 மார்ச் 2017 முடிவடைந்த ஆண்டுக்கான

நிதி அறிக்கைகள்

பணிப்பாளர்களின் அறிக்கை

31 மார்ச் 2017 க்கான கணக்காய்வு அறிக்கையுடன் தமது அறிக்கையையும் உறுப்பினர்களுக்கு சமர்ப்பிப்பதில் பணிப்பாளர்கள் சந்தோசமடைகின்றனர்.

கம்பனி நடவடிக்கைகள்

கம்பனியின் பிரதான நடவடிக்கை அது பிரதானமாக மூலதனமிட்டுள்ள அசோக் லேய்லன் நிறுவனத்தினை கண்காணிப்பதும் வழிநடத்துவதும் ஆகும்.

ஆண்டுக்கான ஆய்வு

	31/3/2016 ரூ
வருமானம்	
வட்டி வருமானம்	6,419,171
(-) செலவீனங்கள்	
நிலய நிர்வாக செலவீனம்	(3,719,024)
இணைக்கப்பட்ட கம்பனி சந்தை மதிப்பு (மிகை/குறை)	(682,742,500)
ஏனைய செலவீனங்கள்	(3,505)
தொழிற்படு இலாபம்/நட்டம்	(680,045,858)
நிதி வருமானம்	34,031,250
வரிக்கு முன் இலாபம்	(646,014,608)
வரி	(1,797,368)
ஆண்டிற்கான வருமானம்	(647,811,976)
ஏனைய பூரண வருமானம்	-
ஆண்டிற்கான மொத்த பூரண வருமானம்	(647,811,976)

பணிப்பாளர்கள்

திரு எம் எஸ் மீராசாக்ஹிப்	தலைவர்
திரு எஸ் ஆனந்தராசா	பணிப்பாளர்
திரு பீ எம் கே ஹெட்டியாராச்சி	பணிப்பாளர்
திரு ஜஸ்ரி ஜவப்தீன்	பணிப்பாளர்
திரு எ எம் ஜஹன்சர்	பணிப்பாளர்
திரு கே டீ எ ச அர்சகுலரத்ன	பணிப்பாளர்

பங்குலாபம்

31 மார்ச் 2017 இல் முடிவடைந்த ஆண்டுக்காக ரூ 34,031,250.00 வினை பங்குலாபமாக அறிவித்ததை உங்களுக்கு அறியத்தருவதில் பணிப்பாளர்கள் சந்தோசமடைகின்றனர்.

பணிப்பாளர்களுக்கு கம்பனி ஒப்பந்ததில் உள்ள அக்கறை

பணிப்பாளர்களுக்கு கம்பனி ஒப்பந்ததில் உள்ள அக்கறை நிதியறிக்கையின் குறிப்பு 17 இல் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

கணக்காய்வாளர்கள்

இந் நிதியறிக்கைகள் பொது கணக்காய்வாளரால் கணக்காய்வு செய்யபட்டுள்ளதுடன் அவர்கள் மீள் நியமனத்துக்கு அனுமதி அளித்துள்ளனர்

சுயாயதீன கணக்காய்வாளர் அறிக்கை

Lanka Leyland (Pvt) Limitted

பங்குதாரர்களுக்கு நிதிக்கூற்றுக்கள் தொடர்பான அறிக்கை

Lanka Leyland limited கம்பனியின் 31- மார்ச் 2017 இல் உள்ளவாறான ஐந்தொகை, அத்தினதில் முடிவடைந்த ஆண்டுக்கன வருமானக்கூற்று, காசுப்பாச்சல்கூற்று, முக்கியமான கணக்கியல் கொள்கையின் சுருக்கம், விளக்கக்குறிப்புகள் எம்மால் கணக்காய்வு செய்யப்பட்டுள்ளன.

நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை சிறிய மற்றும் நடுத்தர நிறுவனங்கலுக்கான இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு அமைவாக தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமாக சமர்ப்பித்தல் ஆகியன முகாமைத்துவத்தின் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிழையான கூற்றுக்கள் அற்ற நிதி அறிக்கைகளை தயாரிப்பதும் சமர்ப்பிப்பதும், உள்ளக கட்டுப்பாடுகளை திட்டமிடல், செயற்படுத்தல் மாற்றும் நடத்திச்செல்லல், பொருத்தமான கணக்கீட்டுக் கொள்கைகளை தெரிவு செய்தலும் பிரயோகித்தலும் பொருத்தமான முறையில் கணக்கீட்டு மதிப்பீடுகளை தயாரித்தலும் இப்பொறுப்புக்குள் உள்ளடங்குகின்றன்.

கணக்காய்வின் நோக்க எல்லையும் அபிப்பிராயத்துக்கான அடிப்படையும்

எமது பொறுப்பானது இக்கணக்கு அறிக்கைகள் தொடர்பான அபிப்பிராயத்தை எமது கணக்காய்வின் மூலம் வெளிப்படுத்துவது ஆகும். எம்மால் கணக்காய்வானது இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு அமைவாக மேற்கொள்ளப்பட்டுள்ளது. இக்கணக்கீட்டு நியமங்களின் தேவைப்பாடானது நாம் இந் நிதிக்கூற்றுக்களை திட்டமிட்டு கணக்காய்வு செய்து அவை பொருண்மையான பிழையான கூற்றுக்கள் அற்றவை என்பதை நியாயமாக உறுதி செய்வது ஆகும்.

கணக்காய்வானது மாதிரி அடிப்படையில் நிதி அறிக்கைகளில் உள்ள தொகைகள் மற்றும் வெளிப்படுத்தல்களுக்கான ஆதரங்களை பரிசோதிப்பது ஆகும். மேலும் கணக்காய்வானது கணக்கியலுக்கான அடிப்படை தத்துவங்கள் மற்றும் ஏனைய நிதி அறிக்கையின் வெளிப்படுத்தல்களை, ஏனைய முக்கிய மதிப்பீடுகள் போன்ற முகாமைத்துவத்தால் பயன்படுத்தப்பட்ட விடையங்களை ஆராய்வதாகும்.

எமது உயர் அறிவுக்கும் நம்பிக்கைக்கும் அமைய கணக்காய்வு நடவடிக்கைகளுக்குத் தேவையான போதிய தகவல்கள் மற்றும் விளக்கங்கள் பெறப்பட்டன என்றும் அதற்கமைய எமது அபிப்பிராயத்திற்கான போதிய அளவு அடிப்படை எமது கணக்காய்வின் மூலம் வழங்கப்பட்டது எனவும் நாம் நம்புகின்றோம்.

அபிப்பிராயம்

எமது அபிப்பிராயத்தில் ,தகுதியான அபிப்பிராயம் ஒன்றுக்கான விடயங்களை பாதிக்காது முறையாக தயாரிக்கப்பட்டுள்ளதுடன், நிதிக்கூற்றுக்கள் உண்மையான மற்றும் நியாயமான கம்பனியின் நிலைமையை 31 மார்ச் 2017 திகதியில் உள்ளவாறு வெளிப்படுத்துவதையும், இலாப மற்றும் காசுப்பாச்சல்கள் சிறிய மற்றும் நடுத்தர நிருவனங்களுக்க்கான கணக்கீட்டு நியமங்களுக்கு அமைவாக உள்ளமயையும் எமது கணக்காய்வு உறுதி செய்கின்றது.

முக்கியமான விடயம்

குறிப்பு 04 இற்கு அமைவாக கம்பனி காணியானது கம்பனி வசம் இல்லை என்பதனை அவதானதுக்கு கொண்டுவருகிறோம்.

ஏனைய சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் தொடர்பான அறிக்கை .

31 மார்ச் 2016 இல் முடிவடைந்த ஆண்டுக்கான கணக்காய்வானது வேறு ஒரு கணக்காய்வாளரால் கணக்காய்வு செய்யப்பட்டது. அவர் 04 ஒகஸ்ட் 2016 அன்று திருத்தப்பட்ட அபிப்பிராயத்தை வெளிப்படுத்தினார் ஏனென்றால் நிறுவனம் காசு அடிப்படையில் வட்டி வருமானத்தினை அடையாலளப்படுத்தியுல்லது. சிறிய மற்றும் நடுத்தர வணிகங்களுக்கான இலங்கை கணக்கீட்டு நியமத்திற்கு அமைவாக வட்டிவருமானமானது வினைத்திரனான முறையைப்பயன்படுத்தி அடையாளம் காணப்பட வேண்டும். வட்டி வருமானமானது உழைக்கப்பட்டவுடன் அடயாலம் காணுவதற்கு பதிலாக காசு அடிப்படையில் காணப்பட்டுள்ளது.

ஏனைய சட்ட மற்றும் ஒழுங்குமுறை மீதான அறிக்கை

இல.07,2007 கம்பனிச்சட்டத்தின் பகுதி 163(2) இற்கு அமைவாக பின்வருவனவற்றை நான் குறிப்பிடுகின்றேன்.

1) அபிப்பிராயத்துக்கான அடிப்படை ,நோக்கம் மற்றும் கணக்காய்வுக்கான வரையறைகள் மேலே குறிப்பிடப்பட்டுளளது.

2) எனது அபிப்பிராயத்தின்படி

- நான் எனது கணக்காய்வுக்குத்தெவையான எல்லா தகவல்களையும் பெற்றுக்கொண்டேன்,அத்துடன் இந்த கம்பனி கணக்கீட்டு அறிக்கைகளை முறையாக பேனிவருகின்றது.

- இக் கம்பனியினது நிதிக்கூற்றுக்கள் இல - 07 ,2007 கம்பனிச்சட்டத்தின் 151 ம் பிரிவின் தேவைப்பாடுகளுக்கு இனங்குகின்றது.

பாராளுமன்றத்துக்கான அறிக்கை

பாராளுமன்றத்துக்கான எனது அறிக்கை அரசியலமைப்பின் 154(6) ம் பிரிவில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளமைக்கு அமைய வரும் காலத்தில் சமர்ப்பிக்கப்படும்.

....

H.M. காமினி விஜேசிங்க

கணக்காய்வாளர் தலைமை அதிபதி

Lanka Leyland (Pvt) Limitted

உள்ளவாறான ஐந்தொகை

	குறிப்பு	31/03/2017 ரூ	31/03/2016 ரூ
சொத்துக்கள்			
நீண்டகால சொத்துக்கள்			
ஆதனம், பொறி, உபகரணம்	4	626,473	626,473
இணைக்கப்பட்ட கம்பனி முதலீடு	5	1,606,275,000	2,289,017,500
		1,606,901,473	2,289,643,973
நடைமுறைச் சொத்து			
முதலீடு	6	56,724,314	56,253,592
வங்கி,காசு மீதியும் காசுக்குச்சமனானவையும்	7	5,339,890	4,460,004
		62,064,204	60,713,596
மொத்த சொத்துக்கள்		1,668,965,677	2,350,357,569
மூலதனம் மற்றும் பொறுப்புக்கள்			
மூலதனம்			
கூறப்பட்ட மூலதனம்	8	8,958,600	8,958,600
பொது ஒதுக்கம்		9,800,924	9,800,924
நிறுத்திவைக்கப்பட்ட இலாபம்		1,648,991,438	2,330,834,664
		1,667,750,962	2,349,594,188
பொறுப்புக்கள்			
நடைமுறை பொறுப்புக்கள்			
வியாபார மறறும் பிற கொடுப்பனவுகள்		52,000	64,397
வருமானவரி பொறுப்பு	9	1,162,715	698,983
		1,214,715	763,380
மொத்த மூலதனம் மற்றும் பொறுப்புக்கள்		1,668,965,677	2,350,357,569

இந்நிதிக்கூற்றானது 7ம் இலக்க 2007ம் ஆண்டு கம்பனிச் சட்டத்திற்கு அமைவாக தயாரிக்கப்பட்டுள்ளது என்பதை உறுதிப்படுத்துகின்றேன்.

....

நிதிக் கட்டுப்பாட்டாளர்

இந்நிதிக்கூற்றானது பணிப்பாளர் சபையால் அங்கீகரிக்கப்பட்டு பணிப்பாளர் சபைக்காக கையொப்பமிடப்பட்டுள்ளது.

....

பணிப்பாளர் **பணிப்பாளர்**

கொழும்பு

29 மார்ச் 2017

Lanka Leyland (Pvt) Limitted

முடிவடைந்த ஆண்டிற்கான வருமானக்கூற்று

	குறிப்பு	31/03/2017 ரூ	31/03/2016 ரூ
வருமானம்	10	6,419,171	3,883,244
		6,419,171	3,883,244
கழி- செலவீனம்			
நிலைய நிர்வாக செலவீனம்		(3,719,024)	(3,045,107)
இணைக்கப்பட்ட கம்பனி சந்தை மதிப்பு (மிகை/குறை)	5.2	(682,742,500)	322,767,500
வேறு செலவீனம்		(3,505)	(4,232)
தொழிற்படு இலாபம்/நட்டம்		(680,045,858)	323,601,405
நிதி வருமானம்	11	34,031,250	54,450,000
வரிக்கு முன் இலாபம்/நட்டம்	12	(646,014,608)	378,051,405
வரி	13	(1,797,368)	(1,087,308)
ஆண்டுக்கன வருமானம்		(647,811,976)	376,964,097
ஏனைய பூரணவருமானம்		-	-
ஆண்டுக்கன மொத்த வருமானம்		(647,811,976)	376,964,097

இணைக்கப்பட்டுள்ள குறிப்புக்கள் ஒரு முழுமையான நிதிக்கூற்றை உருவாக்குகின்றது. அடைப்புக்குள் காட்டப்பட்டுள்ள தொகைகள் கழிக்கவேண்டியவைகளை குறிக்கின்றது.

Lanka Leyland (Pvt) Limitted

31/03/2017 இல் முடிவடைந்த ஆண்டுக்கான மூலதன அசைவுக்கூற்று

	கூறப்பட்ட மூலதனம் ரூ	பொது ஒதுக்கம் ரூ	நிறுதிவைக்கப்பட்ட இலாபம் ரூ	மொத்தம் ரூ
மீள்கூறப்பட்ட மீதி 1/4/2015	8,958,600	9,800,924	2,008,320,567	2,027,080,091
பங்குலாபம்	-	-	376,964,097	376,964,097
ஆண்டுக்கன மொத்த பூரண வருமானம்	-	-	376,964,097	376,964,097
பங்குலாபம்	-	-	(54,450,000)	(54,450,000)
பங்குதாரர்களுடனான கொடுக்களல் வங்கல்	-	-	(54,450,000)	(54,450,000)
மீள் கூறப்பட்ட மீதி 31/03/2016	8,958,600	9,800,924	2,330,834,664	2,349,594,188
வருடத்துக்கான இலாபம்	-	-	(647,811,976)	(647,811,976)
ஆண்டுக்கன மொத்த பூரண வருமானம்	-	-	(647,811,976)	(647,811,976)
பங்குலாபம்	-	-	(34,031,250)	(34,031,250)
பங்குதாரர்களுடனான கொடுக்களல் வாங்கல்	-	-	(34,031,250)	(34,031,250)
31/03/2017 இல் மீதி	8,958,600	9,800,924	1,648,991,438	1,667,750,962

இணைக்கப்பட்டுள்ள குறிப்புக்கள் ஒரு முழுமையான நிதிக்கூற்றை உருவாக்குகின்றது.
அடைப்புக்குள் காட்டப்பட்டுள்ள தொகைகள் கழிக்கவேண்டியவைகளை குறிக்கின்றது.

Lanka Leyland (Pvt) Limitted

முடிவடைந்த ஆண்டுக்கான காசுப்பாச்சல் கூற்று

	குறிப்பு	31/03/2017 ரூ	31/03/2016 ரூ
செயற்பாட்டு நடவடிக்கை மூலமான காசுப்பாச்சல்			
வரிக்கு முன்னரான இலாபம்		(646,014,608)	378,051,405
சீராக்கங்கள்			
வட்டி வருமானம்	10	(6,419,171)	(3,883,244)
பெறுமானத்தேய்வு	4	-	1,396
பங்குலாப வருமானம்	11	(34,031,250)	(54,450,000)
இணைக்கப்பட்ட கம்பனி சந்தை மதிப்பு (மிகை/குறை)	5.2	682,742,500	(322,767,500)
மொத்த சீராக்கங்கள்		(3,722,529)	(3,047,943)
தொழிற்படு மூலதனம் மீதான மாற்றம்			
வியாபார மற்றும் பிற வருமதிகள்		(12,397)	8,617
மொத்த தொழிற்படு மூலதனம் மீதான மாற்றம்		(3,734,926)	(3,039,326)
செலுத்திய வருமான வரி		(1,333,637)	(772,625)
பெறப்பட்ட வட்டி	10	6,419,171	3,883,244
செயற்பாட்டு நடவடிக்கை மூலமான தேறிய காசுப்பாச்சல்		1,350,608	71,293
முதலீட்டு நடவடிக்கை மூலமான காசுப்பாச்சல்			
நிதிச்சொத்துக்களில் முதலீடு(மீள பெறுவன)		(470,722)	(32,434,156)
பெறப்பட்ட பங்குலாபம்	11	34,031,250	54,450,000
முதலீட்டு நடவடிக்கை மூலமான தேறிய காசுப்பாச்சல்		33,560,528	22,015,844
நிதி நடவடிக்கை மூலமான காசுப்பாச்சல்			
செலுத்திய பங்குலாபம்		(34,031,250)	(54,450,000)
நிதி நடவடிக்கை மூலமான தேறிய காசும் தேறிய காசுக்கு சமனானவையும்		(34,031,250)	(54,450,000)
தேறிய காசும் தேறிய காசுக்கு சமனானவையும்		879,886	(32,362,864)
ஆரம்ப காசும் காசுக்கு சமனானவையும் 1/4/2016		4,460,004	36,822,867
இறுதி காசும் காசுக்கு சமனானவையும் 31/3/2017		5,339,890	4,460,004
இறுதி காசும் காசுக்கு சமனானவையும் 31/3/2017			
வங்கி மீதி	7	5,339,890	4,460,004
		5,339,890	4,460,004

இணைக்கப்பட்டுள்ள குறிப்புக்கள் ஒரு முழுமையான நிதிக்கூற்றை உருவாக்குகின்றது.
அடைப்புக்குள் காட்டப்பட்டுள்ள தொகைகள் கழிக்கவேண்டியவைகளை குறிக்கின்றது.

Lanka Leyland (Pvt) Limitted

நிதிக்கூற்று குறிப்புக்கள்

குறிப்பு 1- நிறுவன தகவல்

1.1 கம்பனியின் கூட்டினைப்பும் அதன் முகவரியும்

Lanka Leyland Pvt) Ltd ஆனது ஒரு பொறுப்பு வரையறுக்கப்பட்ட கம்பனியாக 1938ம் ஆண்டு 51ம் இலக்க கம்பனி கட்டளைச்சட்டத்துக்கு அமைவாக கூட்டினைக்கப்பட்டு, 2007ம் ஆண்டு 7ம் இலக்க கம்பனிச்சட்டத்தின் கீழ் மீண்டும் பதிவு செய்யப்பட்டதாகும். இது இலங்கையை வதிவிடமாகக்கொன்ட கம்பனியாகும். கம்பனியின் பதிவு செய்யப்பட்ட வதிவிட காரியாலயமும், தலைமை வியாபார ஸ்தாபனமும் இல 80/12, இறப்பர்வத்த , கங்கொடவில, நுகேகொட என்னும் இடத்தில் அமைந்துள்ளது.

1.2 இக்கம்பனியினுடைய முதன்மையான தொழிற்பாடும் அதன் தன்மையும்

திறைசேரி உண்டியல், நிலையான வைப்புக்களில் முதலீடு செய்வது Lanka Leyland (Pvt) Ltd இன் பிரதான நடவடிக்கையாகும்.

1.3 தாய் நிருவனம்
அரச திறைசேரி செயலாளர்

குறிப்பு - 2 கணக்கீட்டுக்கான அடிப்படை

குறிப்பு - 2.1 பொதுவானவை மற்றும் சிறிய மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கான கணக்கீட்டு நியமங்களுக்கு அமைவாக உள்ளமைக்கன உடன்பாட்டு அறிக்கை.

2017 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான இந்நிதிக்காற்றானது இலங்கை பட்டயக்கணக்காளர் சம்மேளனத்தால் வெளிப்படுத்தப்பட்ட சிறிய மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கான இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு அமைவாக தயாரிக்கப்பட்ட நிதிக்கூற்றாகும்.

2.2 மதிப்பீட்டு அடிப்படை

கீழே உள்ள விடயங்கள் தவிர்ந்த ஏனைய நிதியரிக்கைகளில் உள்ள விடயங்கள்யாவும் வரலாற்றுக்கிரய அடிப்படையிலெயே தயாரிக்கப்பட்டுள்ளதுடன் எந்தவிதமான பணவீக்க தாக்கங்களும் கருத்தில் கொள்ளப்படவில்லை.

1. கடன்கள் மாற்றும் ஏனைய நிதி பொறுப்புக்கள்
2. நியாயமான விலையில் மதிப்பிடப்பட்ட நிதிச் சொத்துக்கள்.

பணிப்பாளர்களால் இக்கம்பனியானது தொடர்ந்து இயங்கும் எனவும் எச்சந்தர்ப்பத்திலும் இதன் வியாபார நடவடிக்கைகள் நிறுத்தப்படமாட்டாது எனவும் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

குறிப்பு 2.3 நிதிக்கூற்றுக்களுக்கான இயக்குனர்களின் பொறுப்பு

சிறிய மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கான இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு அமைவாக நிதியறிக்கைகளை தயாரித்தலும், சமர்ப்பித்தலும் பணிப்பாளர் குளுவின் பொறுப்பாகும்

குறிப்பு 2.4 நிதி அறிக்கைகளுக்கான அனுமதி

31 மார்ச் 2017 இல் முடிவடைந்த ஆண்டுக்கான நிதியறிக்கைகள் 29 மே 2017 இல் நிதிக்கூற்றுக்கள் தேவையானவர்களுக்கு வழங்குவதற்கு இயக்குனர்களால் அனுமதிக்கப்பட்டுள்ளது.

குறிப்பு 2.5 தொழிற்பாடு மற்றும் வெளிப்படுத்துதலுக்கான நாணயம அலகு
எல்லா நிதியறிக்கைகளும் அதன் தொழிற்பாடுகளும் இலங்கை நாணய அலகிலேயே வெளிப்படுத்தப்பட்டுள்ளதுடன். எல்லா நிதியறிக்கைகளும் உள்ள தசம அலகுகள் கிட்டிய ரூபாவிற்கு மட்டம் தட்டப்பட்டுள்ளது

2.6 பொறுன்மை & ஒருங்கினைத்தல்
ஒவ்வொறு பொறுன்மையுடைய ஒத்த தன்மையுள்ள & ஒத்த தன்மையற்ற உருப்படுகள் தனித்தனியாக காட்டப்பட்டுள்ளது.

2.7 அளவிடுதலும் மதிப்பிடலினதும் பயன்பாடு
முகாமைத்துவமானது, சிறிய மற்றும் நடுத்தர அளவுடைய அமைப்புக்களின் தீர்மானங்கள், அளவீடுகள் மற்றும் எடுகோள்கள் என்பவற்றினை மேற்கொள்வதற்கான இலங்கையின் நிதிக்கூற்று நியமத்திற்கு அமைவாக,இவ் அமைப்பின் சொத்துக்கள், பொறுப்புக்கள், வருமானங்கள் மற்றும் செலவுகள் என்பவற்றினை கணக்கீட்டு தத்துவத்தின் தேவைப்பாடுகளை பூர்த்திசெய்யும் வகையில் தயாரித்துள்ளது. அத்துடன் கனக்கீட்டு எதிர்வுகூறப்பட்ட பெறுபெறுகள் சிலவேளைகளில் உண்மைப்பெறுபெறுகளுடன் வேருபட முடியும்.

தொடர்ந்து செல்லும் எண்ணக்கருவின் அடிப்படையில் மதிப்பீடுகள் மற்றும் எடுகோள்கள் பரிசீலனை செய்யாப்படுகின்றது. கணக்கீட்டு மதிப்பீடுகளுக்கான திருத்தங்கள் அவை திருத்தப்படுகின்ற காலத்திலோ அல்லது எதிர்காலத்தில் தேவைப்படுகின்ற போதோ திருத்தப்படுகின்றது.

கணக்கீட்டுக்கொள்கைகளை பயன்படுத்தி முக்கியமான தீர்மானங்களை எடுக்கும்போது நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய தாக்கங்கள் தொடர்பான விடயங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

குறைபாடு மதிப்பீடு - தழ்முபடி காசுப்பாச்சல் கூற்றில் பயன்படுத்தப்பட்ட முக்கியமான மதிப்பீடுகள். சொத்துக்கள் சேதமடைந்ததற்கான எதாவது நியாயமான ஆதாரம் இருக்கின்றதா என ஒவ்வ்வொரு நிதிக்கூற்று சமர்ப்பிக்க வேண்டிய காலப்பகுதியிலும் கம்பனி மதிப்பீடு செய்கின்றது. ஒரு சொத்தினுடைய பயன்பாட்டிளுள்ள பெருமதி மற்றும் நியாயமான பெறுபதியிலிருந்து அதனை விற்பதற்கான செலவைக் கழிப்பதன் மூலம் வரும் பெருமதியைவிட ஒரு சொத்தினுடைய மீழப்பெறக்கூடிய பெறுமதி அல்லது அதனுடைய கசு உருவாக்கக்கூடிய அலகு பெரிதாகும். பயன்பாட்டில் உள்ள பெருமதியை மதிப்பிடும் போது எதிர்கால காசுப்பாச்சல்கள் மற்றும் அச்சொத்துக்கான சேதங்களை இன்றய பணப்பெருமதிக்கு கணிப்பிடுவதன்மூலம் கணிப்பிடப்படுகின்றது.

நடைமுறை வரி - நடைமுறை வரி பொறுப்பானது முகாமைத்துவத்தின் நம்பிக்கையின் அடிப்படையில் வரி சட்டங்களை அடிப்படையாகக்கொண்டு தீர்மானிக்கப்படுகின்றது. சில சந்தர்ப்பங்களில் வருமான வரி திணைக்கலத்தால் முகாமையாளர்களால் கணிப்பிடப்பட்ட வரி குறைவானதாகக் கருதப்படலாம்.

குறிப்பு - 2.8 தொடர்ந்து செல்லல் எண்ணக்கரு
எதிர்காலத்தில் தொடர்ந்து இயங்குவதற்கான போதுமான அலவு சொத்து கம்பனியிடம் உள்ளது என்பதனை இயக்குனர் சபை உறுதிப்படுத்தி உள்ளது. ஆகவே நிதிக்கூற்றுக்களைத்தயாரிக்கும் போது தொடர்ந்துசெல்லும் எண்ணக்கரு கருத்தில் கொள்ளப்பட்டுள்ளது.

குறிப்பு - 3 முக்கியமான கணக்கீட்டு எண்ணக்கருக்கள்
பின்வரும் கணக்கீட்டுக் கொள்கைகள் தொடர்ச்சியாக நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கு கம்பனியால் பயன்படுத்தப்படுகின்றது.

குறிப்பு 3.1 பொதுவாக கவனிக்க வேண்டியவை

இந்நிதிக்கூற்றை தயாரிப்பதற்கான முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள் கீழே சுருக்கமாக விபரிக்கப்பட்டுள்ளது. சிறிய மற்றும் நடுத்தர நிறுவனன்களுக்கான இலங்கை கணக்கீட்டு நியமங்களை சுவீகரம் செய்வதற்காக மேற்கொள்ளப்பட்ட மாற்றங்கள் தவிர பிரயோகிக்கப்பட்ட கணக்கீட்டு கொள்கைகள் கடந்த ஆண்டு பயன்படுத்தப்பட்ட கொள்கைகளுக்கு முரணாக அமையவில்லை.

குறிப்பு 3.2 இணைக்கப்பட்ட கம்பனி முதலீடு

இணைக்கப்பட்ட கம்பனி மீது கம்பனியானது கருத்தில் கொள்ளத்தக்க தாக்கம் செலுத்த முடியும். எனினும் அவை சேய் கம்பனியாகவோ கூட்டுக்கம்பனியாகவோ கருதப்பட முடியாதவை. இணைக்கப்பட்ட கம்பனியின் முதலீடானது கிரயத்தில் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது பின்பு சந்தைப்பெறுமதியில் மதிப்பீடு செய்யப்படும்.

குறிப்பு 3.3 நிதிக்கருவிகள்

3.3.1 கட்டற்ற நிதிக்கருவிகள்.

கம்பனி, ஆரம்பத்தில் கடன்களையும் வருமதிகளையும் அவை பெறப்பட்ட திகதியிலேயே அடையாலப்படுத்தி உள்ளது. ஏனைய அனைத்து நிதிச்சொத்துக்களும் அவற்றின் கொடுக்கள் வாங்கள் திகதியிலேயே ஆரம்பத்தில் வெளிப்படுத்தப்படுகின்றது. இந்த திகதியே கம்பனி கருவி ஒப்பந்தத்தின் ஒப்பந்த விதிகளுக்கு ஒரு கட்சியாகும் திகதியாகும்.

சொத்தினிலிருந்து காசு பாயும் ஒப்பந்த உரிமை காலாவதியாகிவிட்டால் அல்லது கம்பனிக்கு உரிமையான நிதிச்சொத்து தொடர்பான காடசுப்பாச்சலை ஏதாவது ஒரு கொடுக்கல் வாங்கல்களின் போது வேறு யாருக்காவது மாற்றும்பொழுது கம்பனி அந்த நிதிச்சொத்துக்களை நிதியரிக்கைகளில் வெளிப்படுத்தாது. அவ்வாரு உரிமைமாற்றம் செய்யும்போது நிதிச்சொத்திலிருந்தான அனைத்து நட்ட அச்சங்கள் மற்றும் அவற்றிலிருந்தான வெகுமதிகள் அனைத்தும் மாற்றம் செய்யப்படும். உரிமை மாற்றப்பட்ட நிதிச்சொத்துக்களிலிருந்து உருவாகும் அல்லது மீதமாக கம்பனிவசம் இருக்கின்ற வட்டிகள் தனியான சொத்து அல்லது பொறுபாக வெளிப்படுத்தப்படுகின்றது.

நிதி சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களை ஈடுசெய்தல் மற்றும் எஞ்சிய பெறுமதியை ஐந்தொகையிலும் வெளிப்படுத்துதலானது, கம்பனி நிகர தேறிய அடிப்படையில் கொடுத்து தீர்ப்பதற்கு அல்லது சொத்துக்களை பெற்றுக்கொள்ளும் அதே சமயத்தில் பொறுப்புக்களை கொடுத்துத் தீர்ப்பதற்குமான உரிமையினையும் நோக்கத்தினையும் கொண்டிருக்கும் போது மட்டுமே அவ்வாரு செய்யமுடியும்.

(a) முதிர்ச்சியடையும் நிதிச்சொத்துக்கள்

கப்பனி கடன் பத்திரங்கள் தொடர்பாக ஆக்கபூர்வமான (positive) கருத்துக்களை கொன்டிருப்பதுடன் அவை முதிர்ச்சியடையும் வரை வைத்திருக்கக்கூடிய திறனையும் கொண்டிருக்குமாயினனத் -முதிர்ச்சியடைவதற்காக வைக்கப்பட்டுள்ள சொத்துக்களாக வகைப்படுத்தப்படும். முதிர்ச்சியடைவதற்காக வைக்கப்பட்டுள்ள நிதிச்சொத்துக்கள் ஆரம்பத்தில் நியாயமான செலவுகளையும் சேர்த்து நிதியறிக்கைகளில் வெளிப்படுத்தப்படுகின்றது. பின்னர் அவை அவற்றின் குறைந்துகொண்டுவரும் மதிப்பு முறையில் கணிப்பிடப்பட்டு ஏதாவது சேதங்கள் ஏற்படின் செயல்திறனுடைய வட்டி பெறுபதியுடன் ஏதாவது நேரடியாக தொடர்புடைய முறையில் அவையும் கழிக்கப்பட்டு காட்டப்படும். முதிர்ச்சியடைவதற்காக வைக்கப்பட்டுள்ள நிதிச் சொத்துக்கள் நிலையான வைப்புக்கள் மற்றும் ஏனைய திறைசேரி முதலீடுகள் என்பவற்றை உள்ளடக்குகின்றது.

(b) கடன்கள் மற்றும் வருமதிகள்

கடன்கள் மற்றும் வருமதிகள் என்பவை செயல்திறனுடைய சந்தையில் மேற்கோள் காட்டப்படாத நிர்ணயிக்கத்தக்க அல்லது நலையான தொகையைக் குறிக்கும். இத்தகைய சொத்துக்கள் ஆரம்பத்தில் நியாயமான பெறுபதியுடன் ஏதாவது நேரடியாக தொடர்புடைய செலவுகளையும் சேர்த்து நிதியறிக்கைகளில் வெளிப்படுத்தப்படுகின்றது. பின்னர் அவை செயல்திறனுடைய வட்டி முறையில் அவற்றின் குறைந்துகொண்டுவரும் மதிப்பு முறையில் கணிப்பிடப்பட்டு ஏதாவது சேதங்கள் ஏற்படின் அவையும் கழிக்கப்பட்டு காட்டப்படும்.
கடன்கள் மற்றும் வருமதிகள் என்பது காசு மற்றும் காசுக்குச்சமனானவை மற்றும் வியாபார மற்றும் ஏனைய வருமதிகளையும் உள்ளடக்குகின்றது.

குறிப்பு 3.3.1.1 - காசும் காசுக்குச்சமனானவையும்

காசும் காசுக்குச்சமனானவையுமானது, காசு மீதி; அவை பெறப்பட்ட திகதியில் இருந்து அதன் சந்தைப்பெருமதியில் மிகச்சிறிய பெருமதி மாற்றம் நிகழ்வதுடன்,அது குருங்கால தேவைக்காக கம்பனியால் பயன்படுத்தப்படுவதுமாகும்

குறிப்பு 3.3.1.2 ஏனைய நிதிச்சொத்துக்கள்

இந் நிதிச்சொத்துக்கள் ஆரம்பத்தில் அவற்றின் கொடுக்கள் வாங்கள் பெருமதியில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. பின்னர் அவை செயல்திறனுடைய வட்டி முறையில் அவற்றின் குறைந்துகொண்டுவரும் மதிப்பு முறையில் கணிப்பிடப்பட்டுள்ளது.

a. நிதிச்சொத்துக்களை வெளிப்படுத்தாது விடுதல்

நிதிச்சொத்துக்கள் மூலமான காசுப்பாச்சல் இல்லாமல் போகும் போது அல்லது நிதிச்சொத்தில் உள்ள நட்ட அச்சங்கள் மற்றும் அதன் மூலம் கிடைக்கக்கூடிய வெகுமதிகளை வேறு ஒருவருக்கு முழுமையாக மாற்றும் போது அல்லது அந்நிதிச்சொத்துக்கள் மீதான கம்பனியினுடைய கட்டுப்பாட்டை மாற்றிய பின்னர் அந் நிதிச்சொத்துக்களை நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தாது.

3.3.2 நிதி பொறுப்புக்கள்

இப் பொறுப்புக்கள் முதலில் நியாயமான சந்தைப்பெருமதியுடன் எதாவது கொடுக்கள் வாங்கள் கிரயம் இருப்பின் அதனையும் செர்த்து வெளிப்படுத்தப்படும். பின்னர் அவை செயல்திறனுடைய வட்டி முறையில் அவற்றின் குறைந்ட்துகொண்டுவரும் மதிப்பும் முறையில் கணிப்பிடப்பட்டுள்ளது.

நிதிப்பொறுப்புக்கள் ஏனைய செலுத்தவேண்டியவைகளையும் உள்ளடக்குகின்றது.

a. நிதி பொறுப்புக்களை வெளிப்படுத்தாது விடுதல்

ஒப்பந்தத்தின் மூலமான பொறுப்பு முடிவடையும் போது அல்லது அவை இரத்து செய்யப்படும் போது அல்லது காலாவதியடையும் போது அந்த பொறுப்புக்களை கம்பனி நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தாது.

குறிப்பு 3.4 பெறுமதி இழப்பு

கம்பனியினுடைய தெரிவு செய்யப்பட்ட சொத்துக்கள் ஒவ்வொரு ஐந்தொகை முடிவுத்திகதியிலும் ஏதாவது சேதங்கள் ஏற்பட்டுள்ளதா என மதிப்பிடப்படுகின்றது. அப்படி ஏதாவது இருப்பின், எஞ்சிய பெறுமதி கணிப்பிடப்பட்டு ஐந்தொகையில் காட்டப்படுவதுடன் பெறுமதி இழப்பு நட்டம் இலாப நட்டக்கணக்கில் காட்டப்படும்.

குறிப்பு 3.5 பொறுப்புக்களும் ஏற்பாடுகளும்
நிதியரிக்கைகளில் குறிப்பிடப்பட்டுள்ள நடைமுறைப் பொறுப்பு என்பது நிதியாண்டு முடிவடையும் திகதியில் இருந்து ஒரு வருடத்திற்குள் செலுத்தப்பட வெண்டியவையாகும்.

கடந்தகாலத்தில் ஏற்பட்ட ஒரு நிகழ்வின் காரணமாக நிகழ்காலத்தில் ஒரு சட்ட பொறுப்பு நம்பகமானமுறையில் கணிப்பிடப்பட்டு பொருளாதார நன்மை ஒன்றுக்கான சாத்தியக்கூறுகள் காணப்படுமாயின் அது ஒரு ஏற்பாடாக நிதியரிக்ககைகளில் வெளிப்படுத்தப்படும்.

குறிப்பு 3.6 வருமானம்
வட்டி வருமானமானது செயற்திறனுடைய வட்டி வீதத்தின் அடிப்படையில் முதிர்வுக்காலங்களுக்கிடையில் மதிப்பிடப்படுவதுடன், பங்குலாபமானது பங்குதாரர்கள் பங்குலாபம் பெருவதற்கு உரிமை உறுதி செய்யப்படும் போது உருவாகின்றது.

குறிப்பு 3.7 நிதி வருமானம்
இக்கம்பனியினுடைய நிதி வருமானம் இணைந்த கம்பனியிடமிருந்து பெறப்பட்ட பங்குலாபத்தை உள்ளடக்குகின்றது

குறிப்பு 3.8 செலவுகள்
வணிகத்தை நடத்திச்செல்வதற்காக ஏற்பட்ட எல்லா செலவுகளும் அந்தகாலப்பகுதிக்கான இலாப நட்டக்கணக்கில் காட்டப்படும்.
திருத்துதல் மற்றும் புதுப்பித்தல் போன்ற செலவீனங்கள் அது எக்காலப்பகுதியில் ஏற்பட்டதோ அக்காலப்பகுதியில் உள்ள இலாப நட்டத்தில் சீராக்கப்படும்.
அமைப்பின் இலாபமுழைக்கும் சக்தியை அதிகரிப்பதற்காக, நிலையான சொத்துக்களை அதிகரிப்பதற்காகவே அல்லது மேம்படுத்துவதற்காகவோ செய்யப்பட்ட செலவுகள் மூலதனச் செலவாக கருதப்படும்.

குறிப்பு 3.9 ஆதனம், பொறி, உபகரணம்.

குறிப்பு 3.9.1 ஆதனம், பொறி, உபகரணம் என்பவற்றை கணக்கீட்டில் வெளிப்படுத்தும் முறையும் அவற்றை மதிப்பீடு செய்யும் முறையும்.
ஆதனம், பொறி, உபகரணம் என்பன கிரயத்திலிருந்து திரண்ட தேய்மானம், திரண்ட பெறுமதி இழ்ப்பு என்பவற்றைக் கழித்த பின் பெறப்பட்டுள்ளது.

ஆதனம், பொறி, உபகரணம் என்பவற்றில் ஏதாவது ஒரு முக்கியமான பகுதி தனியான பாவனைக்காலத்தினைக் கொண்டிருக்குமாயின் அவை ஆதனம், பொறி, உபகரணம் என்பவற்றில் ஒன்றாக வேறாக பிரித்து காட்டப்படும்.

ஆதனம், பொறி, உபகரணம் என்பவற்றில் ஏதாவது ஒன்றை அகற்றும்போது கிடைக்கும் இலாப நட்டங்கள் இலாப நட்டக்கணக்கில் காட்டப்படும்.

குறிப்பு 3.9.2 ஆதனம், பொறி, உபகரணங்களுக்கு தொடர்ச்சியாக ஏற்படும் செலவுகள்
தொடர்ச்சியாக ஏற்படும் செலவுகள் எதிர்காலதில் பொருளாதார இலாபத்தினை நிறுவனத்திற்கு ஏற்படுத்தினால் மட்டுமே அச் செலவுகள் மூலதனச் செலவாக குருதப்படும்.

ஆதனம், பொறி, உபகரணங்களுக்கான நாளாந்த பராமரிப்புக்கிரயங்கள் வருமான உழைப்பதற்காக ஏற்பட்ட செலவாக கருதப்படும்.

குறிப்பு 3.9.3 பெறுமானத்தேய்வு
பெறுமானத்தேய்வானது ஆதனம், பொறி, உபகரணங்களின் கிரயத்தில் இருந்து அதன் எச்சப் பெறுமதியினை கழித்து வரும் பெறுமதியை நேர்கோட்டு முறையில் மதிப்பீடு செய்யப்பட்ட பயந்தரு ஆயுட்காலங்களுக்கிடையில் பதிவழிக்கப்படு இலாப நட்டப்பணக்கில் காட்டப்படுகின்றது.

நடைமுறை மற்றும் கடந்தகாலங்களுக்கான ஆதனம், பொறி, உபகரணங்களுக்கான மதிப்பீடு செய்யப்பட்ட பயந்தரு ஆயுட்காலங்கள் பின்வருமாரு

அலுவலக உபகரணம் 04 வருடங்கள்

பெறுமானத்தேய்வு முறைகள், பயந்தரு ஆயுட்காலங்கள், எச்சப்பெறுமதிகள் ஒவ்வொரு அறிக்கையிடும் திகதியில் மீள் பரிசீலனை செய்யப்படுவதோடு பொருத்தமான முறையில் திருத்தப்படுகின்றது.

குறிப்பு 3.10 வ்ருமான வரிச் செலவுகள்

சிறிய நடுத்தர நிறுவனங்களுக்கான இலங்கை நிதிக்கணக்கீட்டு அறிக்கையிடல் நியமத்திற்கு அமைவாக (SLFRS) குறித்த கணக்கீட்டு காலப்பகுதிக்கான இலாபம் அல்லது நட்டத்தினை தீர்மானிப்பதன் பொருட்டு நடைமுறை மற்றும் பிற்போடப்பட்ட விரிகலினை உள்ளடக்கியதே வரிச்செலவுகளாகும். வரிச்செலவுகலானது வருமானக்கூற்றிற்கு கொண்டுசெல்லப்படுகின்றது.

குறிப்பு 3.10.1 நடைமுறையாண்டு வரிக்கனிப்பீடு

நடைமுறையாண்டு வரி என்பது குறித்த ஆண்டுக்கான வரி விதிக்கத்தக்க வருமானத்தில் பொருத்தமான வரி வீதத்தை பயன்படுத்தி அறிக்கையிடும் திகதியில் மேலும் கடந்த வருட செலுத்தப்படவேண்டிய அல்லது மீள பெறவேண்டிய வரி தொடர்பில் ஏதேனும் திருத்தங்கள் செய்யப்பட்டு எதிர்பார்க்கப்பட்ட செலுத்தப்படவேன்டிய அல்லது மீளப்பெறவேண்டிய வரித்தொகையாகும்.

வருமானவரிச் சட்டம் (Act No : 10 of 2006) மற்றும் அதனுடன் தொடர்புடைய திருத்தங்களின் அடிப்படையில் வரி நோக்கத்திற்காக சீராக்கப்பட்ட நிதியான்டுக்கான இலாபத்தின் அடிப்படையில் வருமான வரி ஏற்பாடானது மேற்கொள்ளப்படுகின்றது.

குறிப்பு 3.10.2 பிற்போடப்பட்ட வரிக்கணிப்பீடு

பிற்போடப்பட்ட வரிக்கணிப்பீடானது நிதிக்கணக்கீட்டு அறிக்கையிடல் நோக்கத்திற்காக கணிக்கப்பட்ட சொத்து, பொறுப்புக்களின் கொண்டுசெல்லும் பெறுமதிக்கும் வரி நேக்கத்திற்காக கணிக்கப்பட்ட சொத்து, பொறுப்புக்களின் கொண்டுசெல்லும் பெறுமதிக்கும் இடையிலான தற்காலிக வேறுபாட்டினடிப்படையில் கணிக்கப்படுகின்றது. இவற்றுக்கிடையில் தற்காலிக வேறுபாடு இல்லாத சந்தர்ப்பத்தில் பிற்போடப்பட்ட வரி ஏற்பாடு செய்யப்படுவதில்லை.

குறிப்பு 3.11 கூறப்பட்ட மூலதனம்.

பங்கு வழங்கல் தொடர்பில் கம்பனியால் பெறப்பட்ட மற்றும் பெறவேண்டிய பெறுமதிகளின் கூட்டுத்தொகையே கூறப்பட்ட மூலதனமாக கருதப்படுகின்றது.

சாதாரன பங்குறிமையாளர்கள் கம்பனியினால் வழங்கப்படுகின்ற பங்கு இலாபத்தினை பெறுவதற்கும் கம்பனி கூட்டங்களில் ஒரு பங்கிற்கு ஒரு வாக்கு எனும் விகிதத்தில் வாக்களிப்பதற்கும் உரித்துடையவர்கள். கம்பனியை முடிவுறுத்தும்போது கம்பனியின் எஞ்சிய சொத்துக்களுக்கு அனைத்து பங்குகளும் சம உரித்துடையதாகும்.

குறிப்பு 3.12 ஊழியர் நன்மைகள்

குறிப்பு 3.12.1 குறுங்கால ஊழியர் நன்மைகள்.
குறுங்கால ஊழியர் நன்மைகளிற்கான பொறுப்புக்கள் அவர்களுக்கு வழங்கப்பட்ட சேவைகளின் அடிப்படையில் செலவீனங்களாக கணக்குகளில் காட்டப்படுகின்றது

குறிப்பு 3.12.2 வரையறுத்த பங்களிப்புத்திட்டங்கள்
வரையறுத்த பங்களிப்புத்திட்டம் என்பது ஒரு தொழிலுக்குப் பின்னரான நன்மையாக வழங்கப்படும். இத்திட்டத்திற்கு கம்பனி ஒரு நிலையான கொடுப்பனவை வேறு ஒரு நிறுவனத்திற்கு வழங்குவதன் மூலம் வேறு பிற கொடுப்பனவுகளை சட்ட அல்லது உடன்படிக்கைகளின் கீழ் செலுத்துவதற்கான பொறுப்பிலிருந்து தன்னை விடுவித்துக்கொள்கின்றது.

அனைத்து ஊழியர்களும் ஊழியர் சேமலாப நிதி மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதி என்பவற்றிற்கு தகுதியுடையவர்களாகின்றனர். இப்பங்களிப்பு வருமானக்கூற்றில் செலவீனமாக காட்டப்படுகின்றது.

- ஊழ்யர் சேமலாப நிதி (EPF)
ஊழ்யர் சேமலாப நிதிக்காக கம்பனி 12% மும், ஊழியர் 8% மும் பங்களிப்புசெய்கின்றனர்.

- ஊழ்யர் நம்பிக்கை நிதி (ETF)
கம்பனியானது ஊழ்யர் நம்பிக்கை நிதிக்காக ஒவ்வொரு ஊழியருக்கும் அடிப்படை சம்பளத்தில் 3% இனை பங்களிப்புசெய்கின்றனர்.

குறிப்பு 3.13 புதிதாக உருவாக்கப்பட்ட கணக்கீட்டு நியமங்கள் ஆனால் அறிக்கையிடும் திகதியில் அமுலுக்கு வராதவை.
புதிதாக உருவாக்கப்பட்ட கணக்கீட்டு நியமங்கள் மற்றும் திருத்தங்கள் ஆனால் அறிக்கையிடும் திகதியில் அமுலுக்கு வராதவைகள் நடைமுறையாண்டுக்கான நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்காக கருத்தில் கொள்ளப்படவில்லை. இது தொடர்ந்து வரும் நிதியாண்டுகளில் கணக்குகளில் சேர்த்துக்கொள்ளப்படும்.

குறிப்பு 3.13.1 SLFRS: 09 - நிதிக் கருவிகள்
SLFRS: 09 - நிதிக்கருவிகள் தொடர்பான நியமம் LKAS 39 நிதிக்கருவிகள் நியமத்தில் உள்ள வழிகாட்டல்களை மாற்றீடு செய்கின்றது. SLFRS: 09 நிதி கருவிகளின் சேதம் அல்லது இழப்புகளை கணக்கிடுவதற்கான புதிய எதிர்பார்க்கப்பட்ட கடன் இழப்பு மாதிரி உட்பட நிதிக்கருவிகளின் வகைப்படுத்தல் மற்றும் அளவீடுகளில் திருத்தப்பட்ட வழிகாட்டல்களை உள்ளடக்குகின்றது. SLFRS: 09 2018.01.01 இலிருந்து நடைமுறைக்கு வருகின்றது.

கம்பனி SLFRS: 09 அதன் விளைவாக அதன் நிதியறிக்கைகளின் மீது சாத்தியமான தாக்கத்தை மதிப்பீடு செய்கின்றது

குறிப்பு 4 - ஆதனம், பொறி, உபகரணம்

	நிலம்	அலுவலக உபகரணம்	மொத்தம்
	ரூ	ரூ	ரூ
மொத்த தேறிய பெறுமதி			
மீதி 01 ஏப்ரல் 2016	626,473	13,166	639,639
கூட்டல்	-	-	-
பதிவழிப்புகள்	-	-	-
மீதி 31 மார்ச் 2017	626,473	13,166	639,639

பெறுமானத்தேய்வு மற்றும் பெறுமதி இழப்பு

	நிலம்	அலுவலக உபகரணம்	மொத்தம்
	ரூ	ரூ	ரூ
மீதி 01 ஏப்ரல் 2016	-	13,166	13,166
ஆண்டிற்குரிய பெறுமானத்தேய்வு	-	-	-
மீதி 31 மார்ச் 2017	-	13,166	13,166
தேறிய பெறுமதி 31 மார்ச் 2017	626,473	-	626,473

இந்த காணியின் உடமை தற்பொது கம்பனியின்வசம் இல்லை

குறிப்பு 5 இணைக்கப்பட்ட கம்பனி முதலீடு

குறிப்பு 5.1 இணைக்கப்பட்ட கம்பனியில் நியாயமான பெறுமதியை(Fair Value) வெளிப்படுத்தல்

31.March	பங்குகளின் ´ண்ணிக்கை	உடமை 2,017 %	2,016 %	31/03/2017 ரூ	31/3/2016 ரூ
lanka leyland (pvt) limitted	1,512,500	42	42	1,606,275,000	2,289,017,500
				1,606,275,000	2,289,017,500

குறிப்பு 5.2 இணைக்கப்பட்ட கம்பனியின் வெளிப்படுத்தப்பட்ட நியாயமான பெறுமதியில் ஏற்படும் நகர்வு.

	மீதி 31.03.2017	நியாயமான பெறு இலாபம்/நட்டம்	மீதி 31.03.2016
lanka leyland (pvt) limitted இல் முதலீடு	1,606,275,000	(682,742,500)	2,289,017,500
	1,606,275,000	(682,742,500)	2,289,017,500

31.மார்ச்	2017 ரூ	2016 ரூ
குறிப்பு 6 முதலீடுகள்		
நிலையான வைப்புக்கள் (குறிப்பு 6.1)	4,187,950	3,650,000
திறைசேரி உண்டியல்(குறிப்பு 6.2)	52,536,364	52,603,592
	56,724,314	56,253,592
குறிப்பு 6.1 நிலையான வைப்புக்கள்		
மக்கள் வங்கி	3,000,000	2,500,000
தேசிய சேமிப்பு வங்கி	1,187,950	1,150,000
	4,187,950	3,650,000
குறிப்பு 6.2 திறைசேரி உண்டியல்		
இலங்கை வங்கி	2,536,364	2,603,592
மக்கள் வங்கி	30,000,000	30,000,000
தேசிய சேமிப்பு வங்கி	20,000,000	20,000,000
	52,536,364	52,603,592
குறிப்பு 7 காசும் காசுக்குச் சமனானவையும்		
வங்கியிலுள்ள காசு	5,339,890	4,460,004
காசுப்பாச்சல் கூற்றுக்கான காசும் காசுக்குச் சமனானவையும்	5,339,890	4,460,004

P

குறிப்பு 8 கூறப்பட்ட மூலதனம்

31.மார்ச்

	2017		2016	
	பங்குகளின் எண்ணிக்கை	பெறுமதி	**பங்குகளின் எண்ணிக்கை**	பெறுமதி
ஆரம்ப மீதி	2,150,000	15,750,000	2,150,000	15,750,000
அழைப்பு நிலுவை	-	(6,791,400)	-	(6,791,400)
இறுதி மீதி	2,150,000	8,958,600	2,150,000	8,958,600

கூறப்பட்ட மூலதனமானது முழுவதும் செலுத்தப்பட்ட சாதாரன பங்குகளை உள்ளடக்குகிறது.
சாதாரன பங்குறிமையாளர்கள் கம்பனியினால் வழங்கப்படுகின்ற பங்கு இலாபத்தினை பெறுவதற்கும் கம்பனி கூட்டங்களில் ஒரு பங்கிற்கு ஒரு வாக்கு எனும் விகிதத்தில் வாக்களிப்பதற்கும் உரித்துடையவர்கள்.

குறிப்பு 9 செலுத்த வேண்டிய வருமான வரி

31.மார்ச்	2017 ரூ	2016 ரூ
01 ஏப்ரல் மீதி	698,984	384,301
இவ் ஆண்டுக்கான ஏற்பாடு	1,797,368	1,087,308
இவ் ஆண்டு செலுத்தப்பட்டவை	(698,984)	(384,301)
உத்தேச வரிச் சலுகை	(598,491)	(381,824)
பிடித்துவைக்கும் வரி	(36,162)	(6,500)
31 மார்ச் மீதி	1,162,715	698,984

31 மார்ச் இல் முடிவடைந்த ஆண்டுக்கான	2017	2016
	ரூ.	ரூ.

குறிப்பு 10 வருமானம்

வட்டி வருமானம்	6,419,171	3,883,244
	6,419,171	3,883,244

குறிப்பு 11 தேறிய நிதி வருமானம்

பங்குலவப வருமானம்	34,031,250	54,450,000
	34,031,250	54,450,000

குறிப்பு 12 வரிக்கு முன் இலாபம்

பின்வரும் செலவினங்களை கழித்த பின்

பணிப்பாளர் ஊதியம்	1,725,600	1,147,500
கணக்காய்வாளர் ஊதியம்	52,000	64,147
ஊழியர் கிரயம்	584,000	524,200
செயலாளர் உதவுதொகை	264,000	240,000
பெறுமானத்தேய்வு	-	1,396

குறிப்பு 13 வரிச்செலவுகள்

வருமான வரி செலவுகள் (குறிப்பு 13.1)	1,797,368	1,087,308

10ஆம் இலக்க 2006 ஆம் ஆண்டு வருமான வரி சட்டத்துக்கு அமைவாக கம்பனி 28% அதன் வரிக்குரிய வருமானத்தில் செலுத்த வேண்டும்.

குறிப்பு 13.1 வரி செலவீனங்களுக்கும் கணக்கீட்டு இலாபத்துக்குமான இணக்கப்பாடு

மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கானது.	2017	2016
	ரூ	ரூ
வரிக்கு முன் இலாபம்	(646,014,608)	378,051,405
விதிவிலக்கான இலாபம், ஏனைய மூலங்களில் இருந்து பெறப்பட்ட இலாபம்	(40,450,421)	(58,333,244)
வரிக்கு அனுமதிக்கப்படாத மொத்த செலவுகள்	682,742,500	285,596
வரிக்காக குறைக்கக்கூடிய மொத்த செலவுகள்	-	(322,767,500)
வரி விதிக்கக்கூடிய இலாபம்/நட்டம்	(3,722,529)	(2,763,743)
வட்டி வருமானம்	6,419,171	3,883,244
வரி விதிக்கக்கூடிய வருமானம்	6,419,171	3,883,244
வருமான வரி 28%	1,797,368	1,087,308

குறிப்பு 13.2 தற்காலிக வேறுபாடுகாள் இல்லாததால் பிற்போடப்பட்ட வரி ஏற்பாடு செய்யப்படவில்லை

குறிப்பு 14 தொடர்புபட்ட குழுவினர்கள் தொடர்பான வெளிப்படுத்தல்கள்.

குறிப்பு 14.1 தொடர்புபட்ட குழுவினர்களுக்கிடையிலான கொடுக்கல் வாங்கல்கள் இலங்கை கணக்கீட்டு நியமம் LKAS 24 இல் தொடர்புடைய குழுக்கள் தொடர்பாக குறிப்பிடப்பட்டதிற்கு இணங்க தொடர்புடைய தரப்பினருக்கிடையிலான கம்பனியின் கொடுக்கல் வாங்கல்கள் பின்வருமாறு.

தொடர்புடைய குழுகளின் பெயருப உறவுமுறையும்	பொது இயக்குனர்களுடைய பெயர்கள்	கொடுக்கல் வாங்கல்களினுடைய தன்மை	கொடுக்கல் வாங்கல்களினுடைய பெறுமதி
லங்கா லேலன்ட் லிமிடட்(சொந்த)	திரு.M.S.மீராசகிப் (தலைவர் லங்கா லேலன்ட் லிமிடட்(சொந்த)) திரு.A.K.M.ஜகன்சர் (இயக்குனர் லங்கா லேலன்ட் லிமிடட்(சொந்த))	பங்குலாபம் பெறப்பட்டது	34,031,250

குறிப்பு 14.2 முக்கியமான முகாமைப்பணிப்பாளர் மற்றும் அவர்ளுடைய நெருங்கிய குடும்ப உறுப்பினர்களுக்கும் இடையிலான கொடுக்கல் வாங்கல்கள்.

சிறிய மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கான இலங்கை கணக்கீட்டு நியமம் பிரிவு 33 க்கு அமைவாக முக்கியமான முகாமைப்பணிப்பாளர்கள் என்பவர்கள் நிறுவனம் தொடர்பான செயற்பாடுகள் தொடர்பாக திட்டமிடல், வழிநடத்துதல், கட்டுப்படுத்தல் என்பவற்றுக்கான அதிகாரத்தையும் பொறுப்புக்களையும் கொண்டுள்ளவர்கலாவர். இதற்கினங்க பணிப்பாளர் சபை மற்றும் அவர்களுடைய நெருங்கிய குடும்ப உருப்பினர்கள் கம்பனியினுடைய தொடர்புடைய குழுவினர்களாவர். நெருங்கிய குடும்ப உருப்பினர்கள் என்போர் வாழ்க்கைத்துனை மற்றும் தங்கி வாழ்வோறை உள்ளடக்கும்.
இவ்வருடத்தில் எந்தவிதமான கொடுக்கல் வாங்கல்களும் தொடர்புடைய குழுக்களுக்கிடையில் நடைபெறவில்லை.

குறிப்பு 14.3 முக்கியமான முகாமை பணிப்பாளர்களுக்கான இழப்பீடு

மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கானது.	2017 ரூ	2017 ரூ
குறுங்கால ஊழியர் நன்மை	1,725,000	1,147,500

குறிப்பு 14.4 இயக்குனர்கள்க்கான கடன்கள்
எந்தவிதமான கடன்களும் கம்பனி இயக்குனர்களுக்கு கொடுக்கப்படவில்லை

குறிப்பு 15 வரி

15.1 10ம் இல 2006 ஆம் ஆண்டு வருமான வரிச்சட்டத்திற்க்கமைவாக கம்பனி 28% அதன் வரிக்குறிய வருமானத்தில் செலுத்தவேண்டும்.

	31/03/2016	31/3/2015
	ரூ	ரூ
நடப்பு ஆண்டு இலாபத்துக்கான வரி	1,087,308.00	781,927.00
	1,087,308.00	781,927.00

15.2 வரிச்செலவீனங்களுக்கும் கணக்கீட்டு இலாபத்துக்குமான இணக்கப்பாடு

வரிசெலுத்துவதற்கான கணக்கீட்டு இலாபம்	378,051,405.00	20,587,634.00
செலுத்தவேண்டிய இலாபத்தின் வரிவிளைவு	105,854,393.00	5,764,538.00
செலுத்த தேவையில்லாத இலாபத்தின் வரி விளைவு	(105,620,900.00)	(5,293,750.00)
கழிக்க முடியாத செலவீனங்களின் வரி விளைவு	79,968.00	80,022.00
வருமான வரி ஏற்பாட்டு மிகை	-	(700.00)
வருமான வரி ஏற்பாட்டு நட்டம்	773,847.00	231,817.00
	1,087,308.00	781,927.00

15.3 கருத்தில் கொள்ளக்கூடிய தற்காலிக வேறுபாடுகள் இல்லாமையால் பிற்போடப்பட்ட வரி ஏற்பாடு செய்யப்படவில்லை

16 ஐந்தொகை திகதிக்குப்பின்னரான நிகழ்வுகள்

ஐந்தொகை திகதிக்குப்பின்னரான நிகழ்வுகளுக்கு திருத்தங்கள் செய்வதற்கு எது விதமான சந்தர்ப்பங்களும் ஏற்படவில்லை.

குறிப்பு 17 தொடர்புபட்ட குழுவினர்களின் மத்தியிலான கொடுக்கல வாங்கல்கள்.

17.1 முக்கியமான முகாமை பணிப்பாளர்களுடனான கொடுக்கல் வாங்கல்கள் முக்கியமான முகாமை பணிப்பாளர்கள் குறிப்பது கம்பனியின் பணிப்பாளர்சபை உறுப்பினர்களை.

முடிவடைந்த ஆண்டிற்கான

	31/03/2016	31/3/2015
	ரூ	ரூ
குறுங்கால ஊழியர் நன்மை	1,147,500.00	825,500.00

குறிப்பு 18 எதிர்பாராத பொறுப்புக்கள் மற்றும் சொத்துக்கள்

31 மார்ச் 2016 முடிவடைந்த ஆண்டுக்காக நிதிக்கூற்றுக்களில் எதுவிதமான எதிர்பாராத பொறுப்புக்கள் மற்றும் சொத்துக்கள் தொடர்பாக திருத்தங்கள் செய்யப்பட வேண்டியதில்லை.

குறிப்பு 15 நிச்சயமற்ற பொறுப்புக்கள்
நிதிக்கூற்றுக்களை அறிக்கையிடும் திகதியில் நிதியறிக்கைகளில் வெளிப்படுத்தப்பட வேண்டிய அல்லது சீராக்கப்படவேண்டிய எந்தவிதமான நிச்சயமற்ற பொறுப்புக்களும் இருக்கவில்லை.

குறிப்பு 16 மூலதன பொறுப்புக்கள்
நிதிக்கூற்றுக்களை அறிக்கையிடும் திகதியில் நிதியறிக்கைகளில் வெளிப்படுத்தப்பட வேண்டிய எந்தவிதமான மூலதன பொறுப்புக்களும் இருக்கவில்லை.

குறிப்பு 17 வழக்குகள் மற்றும் உரிமை கோரிக்கைகள்
நிதிக்கூற்றுக்களை அறிக்கையிடும் திகதியில் நிதியறிக்கைகளில் வெளிப்படுத்தப்பட வேண்டிய அல்லது சீராக்கப்பட வேண்டிய எந்தவிதமான நிறுவனத்துக்கு எதிரான அல்லது சாதகமான வழக்குகள் மற்றும் உரிமைக்கோரிக்கைகள் இருக்கவில்லை.

குறிப்பு 18 ஐந்தொகைக்கு பின்னரான நிகழ்வுகள்.
நிதிக்கூற்றுக்களை அறிக்கையிடும் திகத்யில் நிதியறிக்கைகளில் வெளிப்படுத்தப்பட வேண்டிய அல்லது சீராக்கப்படவேண்டிய எந்தவிதமான பொருன்மையுடைய ஐந்தொகைக்கு பின்னரான நிகழ்வுகளும் இருக்கவில்லை.